1989 பிப்ரவரி 15]

(ஆ) மாநகராட்சிச் சட்டங்கள் (தனி வகை முறைகள் மற்றும் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (தனி வகை முறைகள் மற்றும் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யும் நிலையிலேயே நாங்கள் எதிர்க்கின்றோம். 18 வயது நிரம்பிய வாக்காளர்களுடைய பெயர்களைச் சேர்ந்து முடிவு செய்ததற்குப் பிறகு இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாநகராட்சிகளுக்கு விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி விரும்புகிறது. பல ஆண்டுகளாகத் தேர்தல் நடத்தப்படாமல் இருந்ததால் இப்பொழுது விரைந்து அது நடத்தப்பட வேண்டும் என்பது எங்கள் அவல். ஆனால் 18 வயது நிரம்பியவர்கள் எல்லாம் ஊராட்சி நகராட்சித் தேர்தல்களில் வாக்களித்து பிறகு மாநகராட்சிகளிலும் அத்தகைய இளைஞர்களுக்கு அதே வாய்ப்பினை அளிக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகின்றோம். இளைய பாரதம் இந்தப் பாரதத்தினுடைய வளர்ச்சியிலே எல்லாக் கட்டங்களிலும், எல்லா மட்டங்களிலும் பெரும் பங்கு பெற இந்திய அரசாங்கமே உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்த வாக்காளர் பட்டியலில் 18 வயது நிரம்பியவர்கள் அனைவருடைய பெயரும் இடம் பெறுகின்ற அளவிற்கு இப்பொழுது ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. எனவே அதனைக் கருத்தில்கொண்டும் இங்கே உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கின்ற கருத்துக்களின் அடிப்படையிலும், இந்தக் குறிப்பிட்ட மாநகர் நோக்கமாக இருக்கிற காரணத்தால் இஸ்லாமிய பெருங்குடி மக்கள் அதில் சம்பந்தப்பட்டிருக்கின்ற காரணத்தாலும், இந்த இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கின்ற வகையிலும், அரசாங்கம் அவர்களுடைய உணர்வுகளை மதிக்கின்ற வகையிலும் தேர்தலை அதற்கு ஏற்ப நடத்த வேண்டு

மென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே அறிமுகத்திலேயே இந்தக் கருத்துக்களுக்காக எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிமுகம் செய்திருக்கிற தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்களின் திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதற்கு எங்களுடைய கட்சியின் சார்பில் என்னுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கிறேன். காரணம், தேர்தல் உடனடியாக வர வேண்டுமென்பது மிக மிக அவசியம் என்பது அனைவரும் ஒத்துக்கொள்ளக்கூடிய விஷயம்தான். இருந்தாலும், பாராளுமன்றத்திற்கும், சட்ட மன்றங்களுக்கும்கூட 18 வயது நிரம்பியவர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டுமென்ற முறையிலே அதற்கேற்ப வாக்காளர் ஜாபிதா எல்லாம் தயாரிக்கும் வேலை நடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில், ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்கள் இந்தத் தேர்தல்களைத் தள்ளி வைப்பதில் எந்தவிதமான பிரச்சினையும் எழுந்துவிடப் போவதில்லை என்பதைத் தெரிவிப்பதோடு, இளைஞர்களுக்கு, குறிப்பாக 18 வயது நிரம்பிய வாலிபர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கவும், அவர்களும் அதிலே பங்கு கொண்டு, சிறப்பாக மாநகராட்சி நிர்வாகம் நடைபெறுவதற்கு அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு வரக்கூடிய ஒரு ஏற்பாட்டைச் செய்யக்கூடிய முறையிலும், 18 வயது நிரம்பியவர்களுக்கும் வாக்குரிமை அளிக்கக்கூடிய முறையில் வாக்காளர் ஜாபிதா திருத்தப்பட்டவுடன் தேர்தலை நடத்துவதுதான் சரியாக இருக்கும் என்ற காரணத்திற்காக அமைச்சரவர்கள் முன்மொழிந்த திருத்தச் சட்ட முன்வடிவிற்கு நான் எதிர்ப்பு தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, 18 வயது உள்ளவர்களுக்கு வாக்குரிமை வேண்டுமென்ற நிலை இந்த மாமன்றத்தில் 1980 ஆம் ஆண்டிலேயே எடுக்கப்பட்டு, அது நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் வேடிக்கை என்னவென்றால், 1980 ஆம் ஆண்டிலேயே மாநகராட்சி மன்றங்களுக்கும் 18 வயது வந்தவர்கள் வாக்கு அளிக்கலாமென்ற அந்த நிலையை நிறைவேற்றாமலேயே கிட்டத்தட்ட 8 ஆண்டுக் காலம் கடந்து போய்விட்டது. 18 வயது நிரம்பிய வாக்காளர்கள் முழுமையாக சேர்க்கப்படவில்லை. இப்போது 18 வயது உள்ள

1989 பிப்ரவரி 15] [டாக்டர் மு. கருணாநிதி]

வர்களை மீண்டும் வாக்காளர்களாகச் சேர்த்து, தேர்தலை நடத்துவது என்றால், இன்னும் 6, 7 மாதங்கள் நிச்சயமாக ஆகு மென்கின்ற சூழல் இருக்கின்ற காரணத்தாலும், மாநகரங்கள் மிக அவதிக்கு ஆளாகி இருக்கிற சூழ்நிலையை நேரடியாகக் காணு கின்ற வாய்ப்பு எங்களுக்கு ஏற்பட்டிருப்பதால்தான் மக்களின் பிரதிநிதிகள் அந்தந்த வட்டங்களில் உடனடியாக வர வேண்டு மென்ற நிலைமையை உணர்ந்து மாநகராட்சி மன்றத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்று அரசு ஒரு முடிவை எடுத் திருக்கிறது.

ரம்சான் பற்றி நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நேற்றையதினம்கூட முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் பேசிய பூம்புகார் தொகுதியி னுடைய உறுப்பினர் திரு. சித்திக் அவர்கள் அதைக் குறிப்பிட் டிருக்கிறார்கள். எனவே ரம்சான் மாதத்திற்கு இடையூறு இல்லாமல், இரண்டொரு வாரங்கள் தள்ளி வைத்து தேர்தலை நடத்தலாமென்கிற கருத்தும் அரசுக்கு இருக்கிறது. அது குறித்து முஸ்லீம் லீக் கட்சியும், காங்கிரஸ் கட்சியும், மற்றவர் களும் எடுத்துக்கூறிய அந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த அடிப்படையில் இந்தச் சட்ட முன்வடிவு இந்த அவையிலே விவாதிக்கப்பட இருக்கிறது என்று எடுத்துக் கூறி, இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் 8 ஆண்டுக்காலம் ஆகியும் 18 வயது வாக்காளர்களைச் சேர்க்க எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஏற்கெனவே ஊராட்சித் தேர்தல்கள், நகராட்சித் தேர்தல்கள் ஆகியவற்றில் 18 வயது வாக்காளர்களுக்கும் வாக்குரிமை தரப்பட்டு, 3 ஆண்டு களுக்கு முன்பே தமிழகத்தில் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. அடுத்து வர இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலும் 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளித்து, நடைபெற இருக்கிறது. எனவே மாநகராட்சித் தேர்தலையும், 18 வயதானவர்களை வாக் காளர் பட்டியலில் சேர்த்து, நடத்துவதுதான் பொருத்தமாக இருக்கும். அதற்கு 6, 7 மாத கால அவகாசம் தேவைப்படாது என்பது என்னுடைய எண்ணம். அதற்கு அதிகபட்சம் இரண்டு மாதங்கள் தேவைப்படலாம். எனவே 18 வயது நிரம்பிய வாக் காளர்களையும் சேர்த்து, தேர்தலை நடத்த வேண்டுமென்று கோரி இந்தச் சட்ட முன்வடிவை நான் எதிர்க்கிறேன்.

[1989 பிப்ரவரி 15

(முற்பகல் 9-30)

திரு. சோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் ஒரு சட்டமுன்வடிவு முன்மொழியப்படும்போது, அறிமுக நிலையிலேயே தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமானால், கட்சிக்கு ஒருவர் தங்கள் கட்சியினுடைய நிலையை எடுத்துச் சொல்வதுதான் இதுவரை மரபாகப் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்போது அறிமுக நிலையிலேயே நீண்ட விவாதமாக ஒவ்வொரு கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் மரபுக்கு மாறாகப் பேசுகிற நிலை உருவாகியிருக்கிறது. இதைத் தாங்கள் தொடர்ந்து அனுமதிக்கப் போகிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து, அவை மரபைக் கடைப்பிடிப்பார்கள் என்று நம்புகிறேன். அடுத்து, சட்ட முன்வடிவிற்கு வருகிறோம்.

திரு. பா. அப்துல் சமத்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்கள், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பாகக் கொடுத்த வேண்டுகோளை . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இப்போது எதிர்க்கிறீர்களா? ஆதரிக்கிறீர்களா?

திரு. பா. அப்துல் சமத்: ஆதரித்துத்தான் சொல்கிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால், அதை ஆளுநர் உரையின்மீது பேசும்போது சொல்லிக் கொள்ளலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரம்ஜான்பற்றி, நான் குறிப்பிட்டதற்கு, முஸ்லீம் லீக் சார்பில் நன்றி தெரிவிக்க விரும்புகிறார் என்று நினைக்கிறேன். நான் ஏற்கெனவே முஸ்லீம் லீக், காங்கிரஸ் ஆகிய இரண்டையும் கூறிவிட்டேன். அது பத்திரிகையில் வரும். ஆகவே. கவலைப்பட வேண்டாம். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "1989 ஆம் ஆண்டு, தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (தனி வகை முறைகள் மற்றும் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

1989 பிப்ரவரி 15]

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது. (குறுக்கீடு) அறிமுக நிலையில் எதிர்க்கலாம், அறிமுகம் செய்ததற்குப் பின்னால் எதிர்ப்பது சரியாகாது. தீர்மானம் நிறைவேறிய பிறகு பேசுவது முறையாகாது. கொஞ்சம் பொறுமை காட்டி, நான் என்ன சொல்லுகிறேன் என்று கவனித்து, அதற்குப் பிறகு செயல் படவேண்டும்.

(இ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1989.

மாண்புமிகு திரு. சோ. வீரபாண்டி ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை, அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. வே. நா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை, ஆரம்ப நிலையி லேயே எதிர்க்கிறோம். ஊராட்சி. ஊராட்சி ஒன்றியங்களின் தேர்தல்களைப் பொறுத்தவரையில். 3 ஆண்டுகளுக்குத்தான் அவர்களுடைய பதவிக் காலம் என்று சொல்லி, அந்தத் தேர்தல் கள் நடைபெற்றன. ஆகவே, 3 ஆண்டுகள் முடிந்தபிறகு, மேலும் 5 ஆண்டுகளாக அவர்களின் பதவிக் காலத்தை அதிகரிக்கிற போது, புதிதாகத் தேர்தல் நடைபெற்று, இந்தச் சட்டத்தை அமுலாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "1989 ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.